## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

## யாழ்ப்பாண மாவட்டம்

# 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 25 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 25 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 26 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | வருமானங்கள் | | சொத்துக்கள் | | பொறுப்புகள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | | | 01 | 41இ182இ591 | 02 | 281இ335 |
| அதிகரித்துக் கூறல்கள் | 02 | 1இ574இ197 | 01 | 162இ532 | 01 | 17இ817 |
| விடுபாடுகள் | - | | | | 02 | 4இ747இ834 |

1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

---------------------------------------------------------

பிரதான பேரேட்டின் பிரகாரம் நானாவித வைப்புக் கணக்கு மீதி ரூபா 2இ446இ768 ஆக காட்டப்படுகின்ற போதும் உப பேரேட்டின் பிரகாரம் நானாவித வைப்புக் கணக்கு மீதி ரூபா 2,436,568 ஆக காணப்படுகின்றது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

-------------------------------------------------------

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

----------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 22இ960இ738 பெறுமதியுடைய 04 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.3.4 பயன்பாடற்ற ஒதுக்கங்கள்

------------------------------------------

கடந்த காலங்களில் வருமான செலவுக் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கங்கள் ஒதுக்கப்பட்ட நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது தொடர்ந்தும் மீதியாக காட்டப்பட்டு வருகின்றது.

| ஒதுக்கவகை | 2012 (ரூபா) | 2013 (ரூபா) |
|---|---|---|
| கடன்களை மீட்டல் | 92இ578 | 92இ578 |
| ஓய்வூதிய ஒதுக்கம் | 4இ570இ689 | 4இ570இ689 |
| பிரதியீட்டு ஒதுக்கம் | 3இ091இ296 | 3இ091இ296 |

1.3.5 இணக்கமின்மைகள்

-------------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப் பட்டுள்ளன.

| <u>சட்டங்கள் விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு</u> | <u>விபரம்</u> |
|---|---|
| <u>1988ம் ஆண்டின் பிரதேசசபை நிதி நிர்வாக ஒழுங்குவிதி</u><br>அத்தியாயம் ஏ பிரிவு 140 | உரிய திகதியில் ரூபா 28இ482 முற்பணம் செலுத்தத் தவறும் போது செயலாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதி இலக்கம் 571 | 2 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,671,148 பெறுமதியான காலங்கடந்த வைப்புக்கள் 1999ம் ஆண்டிலிருந்து சபையின் வைப்பக் கணக்கில் காணப்படுகின்றது. |
| 2012 ம் ஆண்டின் 14 ம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்கள பெறுமதி சேர் வரிச் சட்டம் | கடந்த வருடம் சபையினால் அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரி ரூபா 502,444 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப் படாது திரண்டநிதிக்கு மாற்றப்பட்டுள்ளது. |
| 2006 ம் ஆண்டின் 10ம் இலக்க உள்நாட்டு இறைவரிச்சட்டம் | கடந்த வருடம் அறவிடப்பட்ட ரூபா 57,728 பெறுமதியான பிடித்து வைத்தல்வரி உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு செலுத்தப்படாது திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. |
| 1996ம் ஆண்டின் 34ம் இலக்க பொருட்கள் சேவைகள் வரிச்சட்டம் | கடந்த காலங்களில் சபையினால் அறவிடப்பட்டு நானாவிதவைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த பொருட்கள் சேவைகள் வரி ரூபா 1இ670இ178 உள்நாட்டு |

இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படாது திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்பட்டுள்ளது.

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------------------------

2.1 நிதிசார் விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 37இ893 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகை ரூபா 22இ416இ902 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

----------------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 3இ025இ598 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 9இ064இ323 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்

--------------------------------

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

------------------------------------------------------------------------------------------------------------------

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | '000 | '000 | '000 |
| ை. இறைகளும் வரிகளும் | 1இ768 | 1இ512 | 3இ887 |
| ைை.குத்தகை வாடகைகள் | 6இ863 | 6இ310 | - |
| ைைை.அனுமதிப்பத்திரக் ைஎ.கட்டணங்கள் | 8இ013 | 3இ203 | - |
| எ.வேறு வருமானங்கள் | 60இ143 | 62இ736 | 42இ997 |

2.3.2 வருமான பாதிப்பு

(அ). 2012 – 2013 ம் ஆண்டுகளில் ஆலயங்கள் மற்றும் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தால் நடத்தப்படும் அதிஸ்டலாப சீட்டிழுப்பு வைப்புக்களில் களியாட்ட வரி அறவிடப்படாமையால் ரூபா 17,200 சபையின் வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

(ஆ)புனித கென்ரியர் பாடசாலையின் (இளவாலை) பழைய மாணவர் அபிவிருத்தி அதிஸ்டலாப சீட்டிடுப்பு வைப்பு ரூபா 50,000 இல் களியாட்ட வரி அறவிடப்படாது வரிவிலக்கு வழங்கப்பட்டு மீளளித்தமையால் சபைக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

2.3.3 வருமான முகாமைத்துவம்

ஆதனவரி நிலுவை, வாடகை, குத்தகை மற்றும் உரிமக் கட்டண நிலுவைகள் ரூபா 4,134,005 மீளாய்வாண்டில் அறவிடுவதற்கு சட்டரீதியானதும் ஆக்கபூர்வமானதுமான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை.

2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம்

பல்வேறு கட்டளைச்சட்டங்களின் கீழ் மல்லாகம் நீதவான் நீதிமன்றிலிருந்து மீளாய்வாண்டில் ஜனவரி – யூலை வரை அறவிடப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணப்பணம் ரூபா 1,684,346 வருமானமாக கணக்கிடப்பட்டதேயன்றி ஓகஸ்ட் - டிசம்பர் 2013 வரையான காலத்திற்கு அறவிடவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணங்கள் ரூபா 1,233,438 வருமானமாகவோ வருமதியாகவோ கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

2.3.5 முத்திரைத் கட்டணம்

-----------------------------------

i. 2006 - 2013 ம் ஆண்டு காலங்களுக்கு காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள் ரூபா 8,363,432 ஆக காணப்பட்ட போதிலும் இறுதிக் கணக்குகளில் ரூபா 42,750,240 பெறப்பட வேண்டுமென கணக்கிடப்பட்டுள்ளது. ஆயினும் பெறவேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணங்களை பெறுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

------------------------------------------------

2.4.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்ட பௌதீக வளங்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------

(அ)சபையில் 2001ம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 24 எண்ணிக்கையான ரூபா 34,242 பெறுமதியான பொருட்கள் பயன்பாடின்றி களஞ்சியத்தில் காணப்படுகின்றது.

(ஆ)இருப்புக் கணிப்புச்சபை அறிக்கையின் பிரகாரம் பயன்படுத்த முடியாத 67 வகையான பொருட்கள் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகத்தில் காணப்படுகின்றது.

(இ)தலைமை அலுவலகத்தில் பாவனைக்கு உதவாதவை அழிக்கப்பட வேண்டியவை என கணிப்பீட்டு சபையால் சிபார்சு செய்யப்பட்ட 35 எண்ணிக்கையான பொருட்கள் களஞ்சியத்தில் காணப்படுகின்றது.

(ஈ)சபையின் நிலையான சொத்து பட்டியலில் காட்டப்பட்டு இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட 252-6555 இலக்க பிக்கப் வாகனம் மெய்மையாய்வு செய்தலின்போது வாகனம் பார்வையிடப் பட்டிருக்காமையால் வாகனம் இருக்கும் தன்மை உறுதிப்படுத்த முடியவில்லை.

2.4.2 வாகனப் பயன்பாடு

------------------------------

அ. சீஎ 9792 இலக்க உழவு இயந்திரம் கடந்த 2 வருடங்களாக பயன்பாடின்றி பழுதடைந்த நிலையில் வாகன தரிப்பிடத்தில் காணப்படுகின்றது.

ஆ. ஆறு வாகனங்கள் மானிவாசிப்பு பழுதடைந்த நிலையில் காணப்படுவதினால் கிலோமீற்றருக்கான எரிபொருள் பாவனையினை கணக்காய்வின்போது கண்டறிய முடியாதுள்ளது.

2.4.3 அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன் நிலுவை

---------------------------------------------------------------------------

சபையிலிருந்து இளைப்பாறிய மற்றும் பதவி விறிதாக்கப்பட்ட 11 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய பதவியினர் கடன் நிலுவை ரூபா 66,806 கடந்த 5 வருடங்களுக்கு மேலாகியும் ஓய்வூதிப் பணிக்கொடை மற்றும் பிணையாளிகளிடமிருந்து அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்தும் மீதியாக கணக்குகளில் காட்டப்பட்டு வருகிறது.

2.4.4 செயற்பாடுகளின் செயற்திறமையின்மை

---------------------------------------------------------------

(அ) உள்;ராட்சி ஆணையாளர், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் 2009 – 2010 காலப்பகுதியில் வழங்கப்பட்ட நன்கொடைகள் ரூபா 151,715 குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது சில்லறைக் கடனாளிகள் கணக்கில் உள்ளடக்கியிருப்பது மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகளை கிராம மக்கள் பெற முடியாதுள்ளமையினை காட்டுகின்றது.

(ஆ) மீளாய்வாண்டில் யுனிசெவ் நிறுவனத்தினால் மலசலகூட வேலைத் திட்டத்திற்காக வழங்கப்பட்ட நன்கொடை ரூபா 160,000 பயன்பாடின்றி நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.5 ஒப்பந்த நிர்வாகம்

----------------------------

(அ) செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதில் காலதாமதம்

-------------------------------------------------------------------------------

செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படாமையால் 2012ம் ஆண்டிலிருந்து சில்லறைக் கடனாளிகளில் ஒதுக்கப்பட்ட ரூபா 42இ649இ820 பெறுமதியான வேலைத் திட்டங்கள் அறிக்கையிடும் திகதி வரையும் நிறைவேற்றப் படாதுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) முற்றாகக் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

-----------------------------------------------------------------

வருடாந்த செயற்திட்டங்கள் சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 12 வேலைத் திட்டங்கள் ரூபா 8இ414இ655 பெறுமதியானவை முற்றாக கைவிடப்பட்ட நிலையில் சபைநிதி ரூபா 3இ171இ371 தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்பில் இடப்பட்டமையால் மக்களுக்கு கிடைக்க வேண்டிய அத்தியாவசிய தேவைகள் நிறைவேற்றப்படாதுள்ளது.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாடுகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. வரவு செலவு திட்டம்
ii. சில்லறைக் கடனாளி
iii. நானாவித வைப்பு
iv. நன்கொடை
v. நிலையான சொத்து
vi. பதவியினர் கடன்
vii. வருமான சேகரிப்பு